[2015 மார்ச் 30

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பொறியாளர், திரு. முத்துக்குமாரசாமி இரயில் முன் பாய்ந்து . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, அது C.B.C.I.D. விசாரணையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பிறகு பார்க்கலாம். (குறுக்கீடுகள்) விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது விசாரணையில் இருக்கிறது. பதில் வரட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விசாரணை முடிந்து அறிக்கை வரட்டும், உட்காருங்கள்.*

*(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் விவசாயத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்படியெல்லாம் திடீரென்று அவையில் கேட்கக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 மார்ச் 30]

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.